16th August 1963]

சொன்னல், அது ஒரு புது ஸ்லம் ஆகத்தான் ஆகுமே தவிர, புது டவுன் ஷிப் ஆகாது. நாங்கள் அமைக்கின்ற புது டவுன்ஷிப்புக்கள் எல்லாவற்றிலும் ஒரு பகுதியை குடிசை வாழ்பவருக்கும், ஒரு பகுதியை 'லோ இன்கம் குரூப்' மக்களுக்கும், ஒரு பகுதியை 'மிடில் இன்கம் குரூப்' மக்களுக்கும், இன்னும் ஒரு பகுதியை அதிகமாகப் பணம் கொடுத்து, கிரவுண்ட் ஒன்றுக்கு ரூ. 10,000 கொடுத்து வாங்குபவர்களுக்கும் விட்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தை நடத்துவதன் மூலமாக, குடிசை வாழ்பவர்கள் நல் வாழ்வு வாழ்வதற்கு வசதியாக இருக்கும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : புதிதாக நிறுவப்படுகிற அந்த ஹோட்டல் எப்படிப்பட்ட தரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை அந்த ஹோட்டல் வைப்பவர்களே நிர்ணயிப்பார்களா, அல்லது அரசினர் ஆலோசனை கூறி இருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்டர்நேஷனல் ஸ்டான்டர்டு பிரகாரம் இருக்கிறவர்களுக்குத்தான் இது கொடுக்கப்படும். அதிகமாக டெண்டர் போட்டாலும்கூட, அந்த ஸ்டாண்டர்டைப் பின்பற்ற விருப்பம் இல்லாதவர்களுக்கு அல்லது முடியாதவர்களுக்குக் கொடுக்கப்பட மாட்டாது. இண்டர்நேஷனல் ஸ்டாண்டர்டு என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதற்கு ஆர்க்கிடெக்ட்ஸ் இருக்கிறார்கள். பொது சுகாதார இலாகா எவ்வாறு சானிட்டரி ஃபிட்டிங்ஸ்களை அமைக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். மற்றும் பல இலாகாக்களும் யோசனை கூறுவார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : நகரத்திலே இருக்கின்ற பெரிய ஹோட்டல்களை சர்க்காரே ஏற்று நடத்தி, இது போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க முன்வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஹோட்டல் நடத்துவது சர்க்கார் தொழில் அல்ல என்பதை நான் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன்.

Improvement (Housing) Trusts

* 165 *Q.*—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute Improvement (Housing) Trusts at district and taluk levels?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

சிகரெட்டு விலை உயர்வைத் தடுத்தல்

* ***166 கேள்வி.—திரு. ஆ. கு சுப்பையா :*** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிகரெட்டுகளின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுத்துள்ளதா ? விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : No.